கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 500 மகளிருக்கு கலைஞர் மகளிர் உரிமைத் தொகை ரூ.1000 பெறுவதற்கான வங்கிப் பற்று அட்டைகளை நேற்று (26.09.2023) தருமபுரி மாவட்ட அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை கூட்டரங்கில் நடைபெற்ற விழாவில் வழங்கினார். இவ்விழாவில், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், நாடாளுமன்ற உறுப்பினர் மரு.டி.என்.வி.எஸ்.செந்தில்குமார், சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பி.வெங்கடேஸ்வரன், சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை அரசு செயலாளர் மரு. தாரேஸ் அகமது, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கி.சாந்தி, மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் கானா நாட்டில் நடைபெறவுள்ள 66வது காமன்வெல்த் நாடாளுமன்ற மாநாட்டில் பங்கேற்பதற்காக சென்னை விமான நிலையத்திலிருந்து நேற்று (26.09.2023) புறப்பட்டார். சட்டப்பேரவைச் செயலாளர் முனைவர் கி.சீனிவாசன் உள்ளிட்டோர் உடன் உள்ளனர்.

வேளாண் பொறியியல் துறையின் இயந்திரங்களைப் பயன்படுத்தும்

சிறு, குறு விவசாயிகள் மானியத்தைப் பெற்று பயன்பெறுக!

அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வேண்டுகோள்!

சென்னை, செப்.27-

வேளாண்மைப் பொறியியல் துறையின் இயந்திரங்களைப் பயன்படுத்திடும் சிறு, குறு விவசாயிகள் மானியத்தைப் பெற்று பயனடையுமாறு வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:

தற்போது நிலவி வரும் வேளாண் தொழிலாளர்கள் பற்றாக்குறையினைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு அரசு விதைப்பு முதல் அறுவடை முடிய அனைத்து சாகுபடிப் பணிகளையும் வேளாண் இயந்திரங்கள் மூலமாக மேற்கொள்வதற்கு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இ-வாடகை மூலம் வேளாண் இயந்திரங்கள் முன்பதிவு

சொந்தமாக வேளாண் கருவிகளை வாங்கிப் பயன்படுத்த இயலாத விவசாயிகளின் வேளாண் இயந்திரத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் மண் தள்ளும் இயந்திரம், டிராக்டர், மினி டிராக்டர், நெல் அறுவடை இயந்திரம், கரும்பு அறுவடை இயந்திரம் போன்ற 697 நில மேம்பாட்டு இயந்திரங்களும், சுழல் விசைத்துளைக் கருவி, பெர்குஷன் கருவி, சிறு விசைத்துளைக் கருவி போன்ற 101 சிறுபாசனத் திட்டக் கருவிகளும் விவசாயிகளுக்கு அரசு நிர்ணயித்த குறைந்த வாடகையில் வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும், உளிக்கலப்பை, ரோட்டவேட்டர், கொத்துக் கலப்பை, நிலம் சமன் செய்யும் கருவி, விதை விதைக்கும் கருவி, வரப்பு செதுக்கி சேறு பூசும் கருவி, கரும்பு மற்றும் காய்கறி நாற்று நடவு செய்யும் கருவி, களையெடுக்கும் கருவி, பல்வகை பயிர் கதிரடிக்கும் இயந்திரம் போன்ற 40 வகையான 1,885 டிராக்டரால் இயங்கக்கூடிய வேளாண் கருவிகள் டிராக்டருடன் அரசு நிர்ணயித்த குறைந்த வாடகையில் விவசாயிகளுக்கு வாடகைக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

இவ்வியந்திரங்களை விவசாயிகள் தங்கள் இருப்பிடத்திலிருந்தபடியே முன்பதிவு செய்துகொள்ளும் வகையில், "இ-வாடகை" எனும் செயலி முதலமைச்சர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டு, இதன்மூலம் பதிவு செய்யும் விவசாயிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் இயந்திரங்கள் வாடகைக்கு வழங்கப்படுகின்றன.

வேளாண்மைப் பொறியியல் துறையின் வேளாண் இயந்திரங்களைப் பயன்படுத்த மானியம்

தமிழ்நாட்டில் சொந்த நிலம் வைத்திருக்கும் சிறு, குறு விவசாயிகளுக்கு, வேளாண்மைப் பொறியியல் துறையின் இயந்திரங்களை இ-வாடகை செயலி மூலம் பதிவு செய்து, நில மேம்பாடு, உழவு, விதைப்பு, அறுவடை, பண்ணைக் கழிவு மேலாண்மை போன்ற பணிகளை மேற்கொள்வதற்கு மானியம் வழங்கப்படுகிறது. இதற்காக, தமிழக அரசு இரண்டு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இதில் 40 இலட்சம் ரூபாய் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் விவசாயிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இயந்திர சேவைக்கான மானியம்

வேளாண்மைப் பொறியியல் துறையின் இயந்திரங்களை இ-வாடகை செயலியினை பயன்படுத்தி வாடகைக்குப் பெற்று, பணிகள் நிறைவடைந்த பின்னர், பணி முடிவுற்ற நிலப் பரப்பு துறை அலுவலர்களால் அளவீடு செய்யப்பட்டு, பின்னர் விவசாயி செலுத்திய மொத்த வாடகைத் தொகையில் 50 சதவிகித தொகை, பின்னேற்பு மானியமாக சம்பந்தப்பட்ட விவசாயியின் வங்கிக் கணக்கில் செலுத்தப்படும்.

ஒரு விவசாயிக்கு 5 மணி நேரம் அல்லது 5 ஏக்கர், இவற்றுக்கான வாடகையில் எது குறைவோ அந்த வாடகை மானியமாக வழங்கப்படும்.

நன்செய் நிலமுடைய சிறு, குறு விவசாயிக்கு, அதிகபட்சமாக 2.5 ஏக்கருக்கு, ஒரு ஏக்கருக்கு ரூ.250/- வீதம், அதிகபட்சமாக ரூ.625/-வரை வருடத்திற்கு ஒரு முறை மட்டுமே மானியம் வழங்கப்படும்.

புன்செய் நிலமுடைய சிறு, குறு விவசாயிக்கு, அதிகபட்சமாக 5 ஏக்கருக்கு, ஒரு ஏக்கருக்கு ரூ.250/- வீதம் அதிகபட்சமாக ரூ.1250/- வரை வருடத்திற்கு ஒரு முறை மட்டுமே மானியம் வழங்கப்படும்.

மானியம் பெற ஆன்லைன் மூலமாக விண்ணப்பம் அளிப்பதற்கான வழிமுறைகள் என்ன? என்னென்ன ஆவணங்கள் தேவை?

இத்திட்டத்தில் மானியம் பெற விரும்பும் விவசாயிகள், "உழவன் செயலியில்" இ-வாடகை சேவை மூலமாகவோ இணையதளம் https://mts.aed.tn.gov/evaadagai/ மூலமாகவோ தங்களுக்குத் தேவையான வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை முன்பதிவு செய்து வாடகைத் தொகையை செலுத்த வேண்டும். அச்செயலியில் சிறு, குறு விவசாயிக்கான சான்றிதழ் மற்றும் விவரங்களைப் பதிவேற்றம் செய்து விண்ணப்பிக்க வேண்டும். நிலத்தின் சிட்டா, புல வரைபடம், சிறு, குறு விவசாயிகளுக்கான சான்றிதழ், ஆதார் அட்டையின் நகல், வங்கிக் கணக்கு புத்தகத்தின் முன் பக்க நகல் ஆகிய ஆவணங்களை கள ஆய்வு செய்யும் வேளாண்மைப் பொறியியல் துறையின் அலுவலர்களிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

அதிக மதிப்புள்ள வேளாண் இயந்திரங்களை வாங்க இயலாத சிறு, குறு விவசாயிகளின் நலனுக்காக தமிழ்நாடு அரசு அறிமுகப்படுத்தியுள்ள இத்திட்டத்தில் வேளாண்மைப் பொறியியல்துறை இயந்திரங்களை இ-வாடகை செயலி மூலம் பதிவு செய்து, மானியத்தைப் பெற்று பயனடையுமாறு விவசாயிகள் அனைவரும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

ஆயிரம் விளக்கு மேற்கு பகுதியில்

பயிற்சிப் பாசறைக் கூட்டம் - இளைஞர் அணி புதிய உறுப்பினர் அட்டை வழங்குதல்!

பகுதிக் கழகச் செயலாளர் வினோத் வேலாயுதம் வேண்டுகோள்!

சென்னை, செப்.27-

சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி பயிற்சிப் பாசறைக் கூட்டம் புதிய உறுப்பினர் அட்டை வழங்குதல் ஆயிரம் விளக்கு மேற்கு பகுதியில் இன்று (27.09.2023 - புதன்கிழமை) மாலை 5.30 மணியளவில் சென்னை94, சூளைமேடு, சின்னமணி திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

மு.க.தமிழரசு, நே.சிற்றரசு எம்.சி., தயாநிதி மாறன் எம்.பி., அன்பகம் கலை., எஸ்.ஜோயல்., நா.எழிலன் எம்.எல்.ஏ ப.பிரகாஸ் ஆகியோர் பயிற்சிப் பாசறையில் உரையாற்றி புதிய உறுப்பினர் அட்டை வழங்குகின்றனர்.

இதில் வி.எஸ்.ராஜ், எம்.டி.ஆர் நாதன், டி.ஜோஸ் டேனியல், மாவட்ட நிர்வாகிகள் து.விக்டர் வி.எஸ். கலை, ஆர்.என்.துரை ஏ.சங்கீதா ஜெ.எஸ்.அகஸ்டின் பாபு, பகுதி நிர்வாகிகள் புவி.பாலாஜி, என்.பி.இதயத்பாட்சா, ஸ்டெர்லிங் மோகன், பா.கமலகண்ணன், ரா.பொன்னம்மாள்,

வட்டச் செயலாளர்கள் டேவிட் இன்பராஜ், க.சிட்டிபாபு, வரதை த.பரி, த.குணசேகர், டி.தினேஷ் பிரபு, மு.மோகன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் என்.மோகனவேல், கே.குட்டி, ஜெ.எம்.எச்.இம்ரான், ப.பாலசந்தர், வி.தினேஷ் குமார், பகுதி இளைஞர் அணி பா.அருண், வ.வேல் குமார்,

மாவட்டப் பிரதிநிதிகள் அ.குப்பன், பா.சுரேஷ், எம்.டி.ஆர்.புகழ், எஸ்.பார்த்திபன், த. ஜான்ட், ஆர்.சீனிவாசன், என்.இ.சரவணன், கோ.தட்சிணாமூர்த்தி, வி.என் பாபு, மேலும் பகுதி கழகத்திற்கு உட்பட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், அனைத்து வட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்க வேண்டுகிறேன்.

இவ்வாறு ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி கழகச் செயலாளர் வினோத் வேலாயுதம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சென்னையின் நேற்றிரவு பல்வேறு பகுதிகளில் பரவலாக மழை!

சென்னை,செப்.27-

மேற்குதிசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக, தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என சென்னை வானிலை ஆய்வுமையம் முன்னதாக தெரிவித்து இருந்தது.

இந்த நிலையில், சென்னையின் பல்வேறு பகுதிகளில் நேற்று பரவலாக மழை பெய்தது. சென்னை போரூர், கிண்டி ஈக்காட்டுத்தாங்கல், கொளத்தூர், நந்தம்பாக்கம், ஆலந்தூர், அசோக்நகர், வடபழனி உள்ளிட்ட இடங்களில் பரவலாக மழை பெய்தது.